# போர்வாள்

## ஏமாந்த டாக்டர்!




ஓமந்தூராரைக் கவிழ்க்க பெரிய சதி செய்த டாக்டர் சுப்பராயன் பிரதமர் பதவி தனக்கே வருமென்று கனவு கண்டுகொண்டிருந்தார். ஆனால், என்ன ஆச்சரியம், அந்தப் பதவி குமாரசாமி ராஜாவிடம் சென்றுவிட்டது. ஏமாந்தார் டாக்டர்!

வாள் 2
வீச்சு 32

ஆசிரியர்கள்:
காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன் B.A. HONS.

அ 1/2 ண

Best copy available

## ஆற்றல்மிக்க தமிழர்களை அறப்போருக்கு அழைத்த

# அன்பர் அவினாசியார்

கல்வி அமைச்சர் பதவியை இழந்தனான்று

தமிழ் மக்கள்

அன்னாருக்கு அன்புடன் வாசித்தளித்த

## பிரிவுபசாரத் தாள்

**அமைதித் தமிழரை அறப்போருக்குக் கூவி அழைத்த மாஜிகனம் அவினாசியாரே!**

செல்க! செல்க! தங்கள் செலவு நற்செலவாகுக! இரண்டாண்டு காலம் இந்த திராவிட நாட்டின் கல்வி அமைச்சராக இருந்து, தாங்கள், இந்நாட்டிற்கும், நாட்டின், நலத்திற்கும், அந்நலத்தை ஓம்பவேண்டிய கல்விக்கும், கல்விகற்கும் மாணவர்க்கும், மாணவர்க்கு அறிவூட்டும் ஆசிரியர்க்கும், அந்த ஆசிரியர்களின் வாழ்வுக்கும் விளைத்தகேடு, அப்பப்பா, இமய மலையிலும் பெரிது; வான்வெளியினும் பெரிது; அகன்ற கடலினும் பெரிது. இன்றோ, அத்துணை பெரிய கேட்டிலிருந்து எங்கட்கு விடுதலை கிடைத்துவிட்டது—நீர் வெளியேறுகிறீர்! போய் வாருங்கள் அவினாசியாரே, போய்வாருங்கள்! தாராளமாகப் போய்வாருங்கள்! திரும்பிப் பார்க்காமல் போய்வாருங்கள்!

பேராசிரியர் மறைமலையடிகள், நாவலர் பாரதியார், அறிஞர் திரு. வி. க. போன்ற தமிழ்க் கலைக்கடல்கள் எதிர்த்தன, தேசியவாதிகள் எதிர்த்தனர், மாணவர்கள் எதிர்த்தனர், ஆசிரியர்கள் எதிர்த்தனர், தமிழ்நாடே திரண்டெழுந்து ஒருமுகமாக எதிர்த்தது, என்றாலும் எவரும் விரும்பாத இந்தியை நுழைத்தே தீருவேன் என்று ஆணவத்துடன் கட்டாய இந்தித் திட்டத்தைக் கொண்டுவந்தீர், தமிழர்களை அறப்போருக்குக் கூவி அழைத்தீர், ஈராயிரம் பேர் சிறை செல்லவும், அடக்குமுறைகள் ஊசலைனப் புறப்படவும், குடந்தையில் தமிழர் குருதி கொட்டவும் அடிப்படைக் காரணமானீர். தமிழர்களை இவ்வளவு வேதனைக்குள்ளாக்கிய நீர், தமிழ்மொழியின் வளர்ச்சியைக் சிதைக்கத்தக்க இந்தித் திட்டத்தை நுழைத்த நீர், மாணவர் வாழ்க்கையை பாலைநிலமாக்க முனைந்த நீர் இன்று அமைச்சுப் பதவியை விட்டு வெளியே போகிறீர்! நன்று நன்று! போய் வாரும்!

தமிழன்மீது தளராத பற்றுக்கொண்ட தமிழ்ப் புலவர்களைக் கேலி செய்தீர், அவர்களுக்கு 'ஸ்விச்' கூட போடத் தெரியாது என்று புன்மொழி கூறி அவர்கள் உள்ளத்தைப் புண்படுத்தினீர், இது தகுமா என்று கேட்டவர்மீது சீறிவிழுந்தீர், கடுங்கோபத்தைப் பொழிந்தீர், இன்றோ ஆற்றுவாரும் தேற்றுவாரும் ஆதரிப்பாரும் யாருமின்றி வெளியேறுகிறீர். மிகவும் நல்லது, போய்வாருங்கள்.

தாங்கள் ஏதாவது நன்மையைச் செய்திருக்கிறீர்களா இந்த இரண்டாண்டு காலத்தில் என்று துருவித் துருவிப் பார்த்தோம்—நன்மை ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. கோணல் திட்டங்களும் கவைக்குதவாத சட்டங்களும் திடீர்க்கோப வார்த்தைகளும் உப்புச்சப்பற்ற சொற்பொழிவுகளும்தான் தங்கள் மந்திரி வாழ்வு முழுதும் காணப்படும் இரத்தினக் குவியல்கள். அவற்றை இனியும் எடுத்தெடுத்துக் காட்ட விருப்பமில்லை, அது தேவையுமில்லை—போய்வாருங்கள் பிரமச்சாரி மந்திரியாரே, போய்வாருங்கள்!

இங்ஙனம்
தாங்கள் போவதைப்பற்றி பெரு
மகிழ்ச்சியடையும்
**தமிழர்கள்.**

---


வரலாற்றறிஞர்

**ந. சி. கந்தையாவின்**

**உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு:** தமிழர் நாகரிகத்தின் சிறப்பை விளக்கும் ஆதாரச் சுவடி ஏராளமான வரலாற்றுச் சான்றுகள், மேனாட்டறிஞர்களின் கருத்துரைகள், அரிய ஆராய்ச்சிக் குறிப்புகள் நிறைந்தது. திராவிட மாணவர்கள் தவறாமல் படிக்க வேண்டிய புத்தகம்.

விலை 0—8—0

**திராவிடம் என்றால் என்ன:** திராவிடம் என்ற சொல் எப்படி வந்தது — அது தமிழா, வட சொல்லா — தெலுங்கு மலையாள கன்னடம் பிறந்தது எப்படி— புத்தர் மகாவீரர் புரட்சி—யாவற்றையும் விளக்குவது.

விலை 0—6—0

**ஆரியத்தால் விளைந்த கேடு:** வடமொழியால் தமிழுக்கு ஏற்பட்ட சிதைவையும் சீர்கேட்டையும் விளக்குவது.

விலை 0—6—0

**பெண்கள் போராட்டம்:** பல நாடுகளில், பல காலங்களில் பெண்கள் நிலை—அவர்களின் விடுதலைக் கிளர்ச்சிகள் — பெண்ணடிமை அழிந்த விதம்—இவற்றிற்கான விளக்கங்கள் நிறைந்தது.

விலை 0—6—0

தபால் செலவு தனித்தனி 0-1-0

**பகுத்தறிவுப் பாசறை**
பவழக்காரத் தெரு
சென்னை. 1.


---

## தளபதி அண்ணா ஆம்பூர் வருகை

10-4-49 காலை ஆண்டு விழாவில் அறிஞர் C. N. அண்ணாதுரை, S. குருசாமி, N. V. நடராசன், குஞ்சிதம் அம்மையார் முதலியவர்கள் கலந்துகொள்வார்கள்.

மாலை 6-மணிக்கு

**அறிஞர் அண்ணா**

பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றுவார்.

ஒரு சிறு நாடகம்

# பூதேவர் தோல்வி!

[சென்ற இதழ் தொடர்ச்சி]

## காட்சி 6.

**இடம்:** மாலூரையடுத்த மலைமீதுள்ள லோகநாதன் கோவில்.

**காலம்:** முன்னிரவு.

பூதேவர்கள் மஹாமண்டபத்தில் வீற்றிருக்கின்றனர். வாமனு, வெளிவாசலில்காவல் இருக்கிறுன். மற்றவர்கள் மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு தங்களுக்குள் அரட்டையடிக்கின்றனர். ஆர்யாவும் சார்யாவும் ஒரு மூலையில் தனியாகப் பேசிக்கொள்கின்றனர்.

சார்யா: குருதேவ்! இன்று தங்கள் முகம் சற்று வாட்டமுற்றிருக்கக் காரணம் என்னவோ?

ஆர்யா: சாரி! நீ யூகித்தது உண்மைதான். என்மனம் என்னவோ பயமடைகிறது. நம்முடைய தேவபோகம் விரைவில் முடிவடையும் போல் தெரிகிறது.

சார்யா: என்ன! தாங்கள் இப்படி அதைரியமடைய என்ன நடந்துவிட்டது? என்ன ஆபத்து ஏற்பட்டிருக்கிறது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

ஆர்யா: இன்னும் விஷயம் பகிரங்கமாகவில்லை. ஆயினும் இந்த அனுர்யர்களில் சிலர் நம்முடைய உண்மை நிலையைத் தெரிந்துகொண்டு விட்டனர். எந்த நிமிஷத்தில் நம்மை அம்பலத்தில் இழுத்துவிடப் போகிறுர்களோ தெரியவில்லை. நாம் ஒவ்வொரு நிமிஷமும் ஓட்டத்திற்குத் தயாராய் இருக்கவேண்டியது அவசியம்.

சார்யா: இந்த மடையர்களால் நமக்கு என்ன ஆபத்து ஏற்பட முடியும்? இந்த ஆபத்தை ஒழிக்கத் தங்களால் முடியாதா?

ஆர்யா: மடையர் கூட்டத்திலும் சில புத்திமான்கள் இருக்கிறுர்கள். நமது கூட்டத்திலும் சில மடையர்கள் இருக்கிறுர்கள்.

சார்யா: தாங்கள் கொண்டுள்ள சந்தேகத்திற்கு ஆதாரமான காரியங்கள் என்னவென்று சொல்லவில்லையே! எல்லாம் ஒரு வேளை, தங்களுடைய மனே கற்பனையாக இருக்கக் கூடாதா?

ஆர்யா: சாரி! உன்னைப் புத்திமான் என்றெண்ணியதே தவறென்பது இப்போதுதான் தெரிகிறது. இவ்வள்வு பழகியும் என் சாமர்த்தியத்திற்கூட உனக்குச் சந்தேகமா? நல்லது!

சார்யா: குருமகராஜ்! மன்னிக்க வேணும். தங்களையே நம்பியிருக்கிறவன் நான். (அழுகிறுன்)

ஆர்யா: சரி சரி, அழாதேயப்பா அழாதே! நான் கவனித்திருக்கும் சம்பவங்களைச் சொல்லுகிறேன், கேட்டபின் நான் கொண்ட சந்தேகம் நியாயமா அல்லவா என்று நீயே அறிவாய்.

சார்யா: குருதேவ், மிக்க சந்தோஷம். அருள் செய்யுங்கள்.

ஆர்யா: கேளடா சாரி, கேள்! ஆரம்பத்தில் பத்து நாள்வரை எல்லாம் திருப்தியாக நடந்து வந்தன. அப்பால் சில பெண்கள், கோவிலில் இராக்காலப் பூஜைக்குத் தங்கி வந்தவர்கள், திடீரென்று கோவிலுக்கு வருவதையே நிறுத்திவிட்டனர். இதற்குரிய காரணம், நம்முடைய காமனும் சோமனும் செய்த சேஷ்டைகள் என்று அறிந்தேன். ஆரம்பத்திலேயே, இவ்விரு வாலிபர்களுக்கும் எவ்வளவோ எச்சரிக்கை செய்தும் இவர்கள் இவ்வாறு நடந்தது நம்முடைய சுக வாழ்வையே பாழ்செய்யும் போல் தெரிகிறது. இந்தப் பெண்களாவது விஷயத்தைத் தங்கள் புருஷர்களுக்குத் தெரியப்படுத்தாமல் இருந்திடுவார்களென்று நம்பியிருந்தேன். இந்த நம்பிக்கையும் நாலு நாளைக்கு முன் நடந்த ஒரு சிறு சமபவத்தால், போய்விட்டது! பெத்தியணனும் செட்டியப்பனும், சென்ற நான்கு நாட்களாக எல்லோரையும்போல், நம்மை மரியாதைசெய்வதில்லை என்பதைக் கவனித்தாயா? முன்பெல்லாம், இவர்கள் வந்தவுடன் நம்காலில் விழுந்து நமஸ்கரித்து நம்முடைய பாததூளியை எடுத்து நெற்றியில் வைத்துக்கொள்வது வழக்கம். ஆனுல் இந்த இருவரும் நாலு நாளாக நம்மை நமஸ்கரிப்பதேயில்லை.

சார்யா: ஆம்! தாங்கள் சொல்வது வாஸ்தவம். நானும் இதைக் கவனித்தேன். ஆனுல் இவ்விருவர் என்ன செய்யமுடியும்? பூசாரியும் ஊராளியும் நம்மைப் பூர்ணமாய் நம்பியிருக்கிறுர்களல்லவா?

ஆர்யா: நேற்றைய சம்பவத்திலிருந்துதான் என் பயம் உறுதிப்பட்டுவிட்டது. பூசாரி எப்பொழுதும் போலவே நடந்துகொள்கிறுன் என்றுலும் நேற்றைக்கு அவன் ஊராளியுடன் பேசிக்கொண்டதிலிருந்து இவனையும் நம்புவதற்கில்லை. நேற்றிரவு போகும்போது, பெத்தியணன் என்னவோ முணுமுணுத்தான். செட்டியப்பன் மெல்லியகுரலில் "நாள் பக்கத்திலேதான்" என்று சொல்வது காதில் விழுந்தது. ஊராளி "பிச்சைக்கு வந்தவன் பெண்ணுக்கு மாப்பிளையா?" என்று சொன்னதும் காதில் விழுந்தது. பூசாரியும் இதே வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு போனுன். இவைகளிலிருந்து நீ என்ன நினைக்கிறுய்?

சார்யா: காரியம் கொஞ்சம் கெட்டுப் போனதாகத்தான் தெரிகிறது!

ஆர்யா: கொஞ்சம் கெட்டுப் போனதாகத் தெரிகிறதா? முற்றிலும் கெட்டுவிட்டதடா சாரி, முற்றிலும் கெட்டுவிட்டது! இவர்கள், நம்முடைய விஷயங்களைத் தெரிந்தபிறகும் மௌனமாக இருந்துவருவதுதான் எனக்கு அதிக பயமாயிருக்கிறது. இவர்களில் எவனுவது படபடவென்று வாய்விட்டுப் பேசியிருந்தால், பிரமாதமாகக் கெடுதல் வராது. ஒவ்வொருவனும் மௌனமாக நடந்துகொள்வதனுல்தான், இவர்கள் என்னசெய்ய நினைத்திருக்கிறுர்கள் என்பதைக்கூட அறிய முடியவில்லை. ஒன்றுமட்டும் நிச்சயம், நமக்குப் பெரிய ஆபத்துத் தலைமேல் இருக்கிறது.

சார்யா: ஐயையோ! அப்படியானுல் தப்பும் மார்க்கம் தேடிக்கொள்ள வேண்டியதுதான்!

[10-ம் பக்கம் பார்க்க]

# திறந்த மடல்

ஓமந்தூர்-இராமசாமியார்,
முன்னாள் முதல்வர்,
ஓமந்தூர்.

பார்ப்பனீயம் என்னும் கூரிய ஈட்டி முனையாலே ஈவு இரக்கமின்றி குத்தப்பட்டு, தோல்விக் குருதி ஆறெனப் பெருக்கெடுத்தோட, தரைமண்ணில் துவண்டு வீழ்ந்த முன்னாள் முதலமைச்சரே,

வணக்கம். தங்கள் அடக்குமுறைப் பாணத்திற்கு ஒரு சமயம் ஆளாகவிருந்த இந்தப் "போர்வாள்" ஏடு மூலமாக இத் திறந்த மடலினை யான் தீட்டிக்கொண்டிருக்கும் இதே நேரத்தில், தாங்கள், தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனம் தாலுகாவில், ஓமந்தூர் கிராமத்தில், மழை இல்லாக் காரணத்தால் பாலைவனம்போல வறண்டு கிடக்கும் கழனிக்காடுகளின் வரப்புமீதோ அல்லது அந்தக் கழனிகளுக்கிடையே அமைந்துள்ள தங்கள் இல்லத்தின் தாழ்வாரத்திலோ இருந்தவண்ணம், தங்களை பிரதமர் பதவியிலிருந்து விலகச் செய்த நம்பிக்கைத் துரோகிகளின் நயவஞ்சகச் செயலினைப் பற்றியோ, கூட இருந்து கூடிக் குலவிக் கழுத்தறுத்த கயவர்களின் கபட நினைப்பைப் பற்றியோ, மந்திரி சபைக்கு உள்ளிருந்துகொண்டே கங்கட்கு வேட்டு வைத்த "மகாகனம்"களின் முழு மோசத்தனத்தைப் பற்றியோ அல்லது பார்ப்பன வட்டாரம் என்ன பாடு பட்டேனும் தங்களை ஒழித்தே தீர்வது என்ற திடமுடிவுடன் செய்துவந்த எண்ணற்ற சூழ்ச்சிகளைப்பற்றியோ அல்லது காங்கிரஸ் எம். எல். ஏ-க்களின் உள்ளத்தை ஆட்டிப் படைக்கும் பெர்மிட்—லைசென்ஸ்—சுரண்டல் மோகத்தைப் பற்றியோ, அல்லது, சட்டசபை காங்கிரஸ் கட்சிக்குள் இருக்கும் பல்வேறு கோஷ்டிகளின் பதவிபிடி சண்டை எவ்வளவு கீழ்த்தரமானதாக ஆகிவிட்டது என்னும் துக்ககரமான சம்பவத்தைப் பற்றியோ எண்ணமிட்டவண்ணம் இருப்பீர்கள்.

தங்கள் உள்ளத்தில் இதுபோன்ற எண்ண அலைகள் மோதிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் ஆரிய வட்டாரத்தில் ஆநந்த வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருக்கும். "ஓமந்தூரார் ஒழிந்தார்! விபூதி பூசிய இராமசாமி நாயக்கர் ஒழிந்தார்! கதர்சட்டை அணிந்துகொண்டிருந்தாலும் கருப்புச் சட்டைக்காரரைப்போல நடந்துவந்த நாஸ்திக பிரதமர் ஒழிந்தார்! உத்தியோகங்களில் நமக்கு இருந்துவந்த ஏகபோக உரிமையை மட்டந்தட்ட வந்தவர் ஒழிந்தார்!" என்றெல்லாம் கூறிக்கூறி முப்புரித்தாரிகள் மகிழ்ச்சிக் கடலில் நீந்தித் திளைத்த வண்ணம் இருப்பர்: களிப்பு அவர்கள் உள்ளத்தை முற்றுகை போட்டுவிட்டிருக்கும். ஒழித்து விட்டோம் ஓமந்தூராரை என்ற எக்காளம் அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் ஒலித்துக் கொண்டிருக்கும். "துள்ளினரே இந்த துராத்மா மதப்பற்று மிக்க மகாத்மா வேடம் போட்டுக் கொண்டு! கோயில் பூனைகளின் கொட்டத்தை அடக்குவேன் என்று தைரியமாக முன் வந்து அச்சமின்றி உரைத்தாரே! ஓடினரே இன்று பிடரியில் கால்பட! பிராமணத் துவேஷிகளின் கதி இதுதானப்பா இதுதான்" என்ற செருக்கான நினைப்பு, ஆணவ எண்ணம், வஞ்சகக் கருத்து அவர்கள் தீட்டும் ஒவ்வொரு எழுத்திலும் நிழலாடிக் கொண்டிருக்கும். ஆமாம், முன்னாள் முதல் அமைச்சரே, ஆரிய வட்டாரத்தில் இதுபோது ஆநந்தப் பள்ளுதான் பாடப்படுகிறது, களிப்புச்சிந்துதான் இசைக்கப்படுகிறது, மோகன ராகம்தான் பார்ப்பனச் சேரியின் தெருவெல்லாம் வீடெல்லாம் கேட்கிறது இந்நாள்! நீர் அறியமாட்டீர் இதனை, ஓய்வாக, இனி இந்தப் பாரமான வேலை இல்லையே என்ற களிப்போடு, பிரதமர் பதவியைச் சுமக்கவேண்டிய கஷ்டம் தொலைந்தது என்ற மகிழ்ச்சியோடு, எங்கோ கிராமத்தில் பயிர் பச்சைகளுக்கிடையில் இருக்கிறீர் நீர், ஆகவே ஆரிய வட்டாரத்தில் உம் வீழ்ச்சி கண்டு ஏற்பட்டுள்ள ஆநந்த சாகரத்தின் அளவை நீர் அறிய மாட்டீர் ஆனால் தாங்க முடியாத பெருங்களிப்பின் காரணமாக வேதபுரியினர் இந்நாளில் குதித்துக் குதித்துக் கூத்தாடுவது மட்டும் உண்மை.

இருக்காதா களிப்பு அவர்களுக்கு! எப்ப ஒழிவாரோ இந்தப் பார்ப்பன வைரி என்று பண் பாடிக்கொண்டிருந்தனர், நீரோ இப்போது "ஒழிந்து" விட்டீர், எனவே மகிழ்ச்சி பிறக்காதா அந்த சதுர்வேதி மங்கலத்தவர்க்கு! சுரக்காதா ஆநந்தம் அவர்கள் உள்ளத்தில்! ஆடமாட்டார்களா ஆநந்தத் தாண்டவம் அந்த ஆரியபுரியினர்! "பட்டை பட்டையாக விபூதி பூசிக்கொண்டிருக்கிறார் — பக்திமான் — பகவன் நாமத்தையே உச்சரிக்கிறார்—பரமன் அடியாரிடம் பேரன்பு காட்டுகிறார்—கார்த்திகேயனை எண்ணி உருகாத நேரமில்லை—கிருத்திகை விரதமோ தவறுவதில்லை — கிடைத்தாரப்பா சரியான புள்ளி நம் வலையில் சிக்க —கொட்டம்தான் இனி நமக்கு—சட்டம்தான் நாம் இட்டதெலாம் இனி" என்றெண்ணிக் களித்ததே அச்சிறு கூட்டம் நீர் பதவி ஏற்றவுடன், ஆனால் முகம் சுளித்ததே பின்னர் நீர் எத்தகைய உள்ளத்தவர் என்பது தெரிந்ததும், சூழ்ச்சித் திட்டம் வகுத்ததே அதன் பிறகு உம்மைக் கவிழ்க்க, வெற்றி பெற்றதே அச் சூது மார்க்கத்தில்! பிறகு ஏன்தானே, களிப்பு, அவர்கள் வட்டாரத்தில் உலவாமல் இருக்கும்?

ஆரியபுரியினர் ஆநந்தக்கூத்தாடுவது கிடக்கட்டும் ஒரு புறம்—அந்த ஆநந்தம் அற்ப ஆயுள் உடையது—புது பிரதமர் குமாரசாமி ராசாவின் மந்திரி சபையைக் கண்டதுமே அந்த ஆநந்தம் எவ்வளவோ மங்கிவிட்டது—ஆகவே அந்தச் சிறுமதியினரின் சித்தத்தில் எழும் களிப்புபற்றிய சிந்தனை நமக்குத் தேவையில்லை — ஆனல் திராவிடர்கள், இந்த நாட்டு சொந்தக்காரர்கள், உம் இனத்தவர்கள், உம்மோடு உடன்பிறந்தவர்கள்; நீர் போகிறீர் என்பதைக் கேட்டதும் உள்ளம் வருந்தினரே, வருந்

தியு உள்ளம் அவர்களின் கசங்கிய கண்கள்மூலமாகத் தென்பட்டதே, கண்களின் துக்கம் நனைந்த கன்னங்கள் வழியாக வெளித்தெரியலாயிற்றே, ஓமந்தூராரா போய்விட்டார்—நம் அமைச்சரா போய்விட்டார் — சத்தியவானா போய்விட்டார் — நேர்மை ஒழுக்கம் நீதி கண்ணியம் ஆகியவற்றின் திருஉருவம்போல் அமைந்திருந்த திருவாளரா போய்விட்டார் என்று சொல்லிச் சொல்லிப் புலம்பினரே திராவிடர், உம் வீழ்ச்சி ஒவ்வொரு திராவிடனின் உள்ளத்திலும் துக்கத்தை, சோகத்தை, வேதனையை உண்டுபண்ணிற்றே, உம் தோல்வியைத் தம் தோல்வி எனவும் உம் வீழ்ச்சியைத் தம் வீழ்ச்சி என்வும் கொண்டு உள்ளம் வருந்தினரே திராவிடர், ஓமந்தூரார் போய்விட்டார் என்ற வாசகத்தை தம் உள்ளத்தைத் தூள்தூளாக்க வந்த வெடிகுண்டுபோல எண்ணிக் கண்ணிற் பெருக்கினரே நீர் அருவி, அதை மட்டும் மறந்துவிடாதீர். நீர் திராவிடர்கள்மீது அடக்குமுறைகளை நூற்றுக்கணக்கில் ஏவியிருக்கிறீர் — திராவிடர் தலைவர் பெரியாரை இருமுறை வெஞ்சிறையில் தள்ளி வதையவைத்திருக்கிறீர் — தளபதி அண்ணாவை இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் நிறுத்தி வைத்து வேடிக்கை பார்த்திருக்கிறீர்—கருப்புச் சட்டைக்குத் தடை, பகுத்தறிவு நாடகங்களுக்குத் தடை, இராவண காவியத்திற்குக் கடை, எண்ணற்ற கூட்டங்கட்குத் தடை என்று வரிசை வரிசையாக 144-களை வீசியிருக்கிறீர் — ஏறத்தாழ இரண்டாயிரம் திராவிடர்களை அறப்போர் காரணமாக காராக்கிருகத்தில் தள்ளியிருக்கிறீர்—குடந்தையில் நீர் நடத்திய தடியடி நிகழ்ச்சியோ கல்நெஞ்சையும் கரையவைக்கும் தன்மையது—"விடுதலை"க்கு நீர் கேட்ட 2000-த்தையும் இயக்கத்தை ஒடுக்க நீர் கையாண்ட பாணங்களையும் எவருமே மறக்க முடியாது — இவற்றையும், இவை போன்ற எண்ணற்ற, நினைத்தாலே உள்ளத்தை வேதனைக்காடாக மாற்றத்தக்க கொடுமைகளையும் நீர் கையாண்டுதான் இருக்கிறீர் — பக்கிங்காம் மில் எழுச்சியின்போது தொழிலாளர் வதைக்கப்பட்டதையும் என்.ஜி.ஓ. போராட்டத்தின்போது கண்ணீர்ப்புகை வீசப்பட்டதையும் யார் மறக்கமுடியும் — என்றாலுங்கூட திராவிடம் நீர் போகிறீர் என்பதைக் கேட்டதும் உள்ளம் வருந்துகிறதே தவிர இவ்வளவு கொடுமைகளைச் செய்தவர் ஒழியத்தானே வேண்டும் என்றெண்ணிக் களிப்புறவில்லை. எதை மறந்தாலும் மறக்கலாம் ஆனால் முன்னாள் முதல்வரே, இதைமட்டும் நீர் மறத்தல் ஆகாது; மறந்தொரு நாளும் இருத்தல் ஆகாது.

இப்போது, நீர், தோல்வியைத் தழுவி துக்கபுரியில் உலவும் இந்த விநாடியில் மட்டுமல்ல, முன்பு, முதலமைச்சராக இருந்துகொண்டு முடுக்கான மொழிகளை வீசிக்கொண்டிருந்த வேளையிலும்கூடத் தான், திராவிடன், நீர் அவனுக்கு இழைத்த தீங்குகட்கெல்லாம் பழிக்குப் பழி வாங்குவோம் என்ற தீய நினைப்பு துளியுமின்றி, உமக்கு ஆபத்து என்று ஏற்பட்ட வேளையில் எல்லாம் உமக்கு கைகொடுத்து உதவியிருக்கிறான்—இதனையும் நீர் மறக்கக் கூடாது! நீர் மறக்கவும் முடியாது! ஜமீன் மசோதா, மடாலயத் திருத்த மசோதா முதலியன சட்டமன்றத்தில் உம்மால் கொண்டு வரப்பட்டபோது உம் கட்சித் தோழர்களே உம்மைக் காட்டிக் கொடுத்தனர், ஊரில் அலர் தூற்றினர், பின்னாலிருந்து குழி பறிக்க முந்தினர், ஆனால் நாங்கள், மாற்றுக் கட்சியினர், உம்மால் வசைக்கும் இழிவுக்கும் சிறைவாழ்வுக்கும் ஆளானவர்கள், திராவிடத் தோழர்கள்தான் உம்மைப் பூரணமாக ஆதரித்து வந்திருக்கிறோம், வைத்தியநாதர்களின் கணைகள் உம் உடலைத் தாக்கா வண்ணம் உம்மைக் காப்பாற்றியிருக்கிறோம் — நினைவிருக்கட்டும்! ஆபத்து உம்மை மிரட்டிய வேளையில் எல்லாம் உமக்கு அபயம் கொடுத்து ஆதரித்தவன் திராவிடக் கழகத் தோழன்! உம்மால் தடியடிக்கு உள்ளாகி குடந்தை மண்ணில் குருதியைக் கொட்டியவன்! —நினைவிருக்கட்டும்! பார்ப்பனீயம் உங்கள் கட்சியில் இருந்துகொண்டே உங்கள் ஆதரவைப் பெற்றுக்கொண்டே உங்களை வீழ்த்தியிருக்கிறது; திராவிடர் கழகம் வேற்றுக் கட்சியாக இருந்தாலும், உங்களால் தாக்குதலுக்கு ஆளாகும் நிலையினதாக இருந்தாலும், உங்களைப், போற்றியிருக்கிறது—நினைவிருக்கட்டும்! வைத்தியநாதர்கள் உம் துணையை, தோழமையை, உதவியை ஒரு கையால் பெற்றுக்கொண்டே மற்றொரு கையால் உம்மீது கவண்கல் வீசிக்கொண்டிருந்தனர், நாங்கள், திராவிடக் கழகத்தவர்கள் உம்மால் ஏவப்பட்ட அகோரமான தடியடியால் எங்கள் உடலிருந்து கொட்டும் குருதியை ஒரு கையால் துடைத்துக் கொண்டே, மற்றொரு கையால் உங்களுக்கு வந்த ஆபத்தை ஒழித்துக் கட்டியிருக்கிறோம்—நினைவிருக்கட்டும்! வைத்தியநாதர்களின இருகரங்களில் ஒன்றை உம்முடைய உதவியைப் பெற்றுத் தீரவேண்டிய கட்டாயத்தில் நிறுத்திவிட்டீர், இல்லையானால் அவர்கள்தம் இரு கரங்களுமே உம்மீது அனல் கட்டிகளை அள்ளி வீசும் "திருப்பணி"யைச் செய்திருக்கும்; எங்கள் இரு கரங்களில் ஒன்றை நீர் கொடுக்கும் தடியடியால் சிந்தும் இரத்தத்தைத் துடைக்கவேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கிவிட்டீர், இல்லையானால் எங்கள் இரு கரங்களுமே உம்மை ஆபத்துக் காலத்தில் அணைத்து ஆதரவு தந்திருக்கும்—இதனையும் மறந்துவிடாதீர்.

நீர் திராவிடர்களுக்குச் செய்த நன்மை கொஞ்சம்; தீமைதான் அதிகம். ஆனால் நீர் திராவிடர்களுக்குச் செய்த இந்தக் கொஞ்ச நன்மைக்காகத்தான் ஆரியம் உம்மீது பழிவாங்கி விட்டது—இன்று நீர் ஒழிந்தீரே என்றெண்ணி ஆம்காரச் சிரிப்புச் சிரிக்கிறது. ஆனால் திராவிடர் கழகம், நீர் திராவிடர்க்குச் செய்த இந்தக் கொஞ்ச நன்மையை முன்னிட்டுத்தான் நீர் செய்த அதிகத் தீமையை துளியும் பொருட்படுத்தாமல், நீர் தீமையைச் செய்துகொண்டிருந்த அந்தக் குறிப்பிட்ட விநாடியில்கூட, உம்மை ஆதரித்திருக்கிறது. ஆரியப் பண்பு—அது! திராவிடப் பண்பு—இது! இரண்டு பண்பாட்டிற்கும் இடையே உள்ள இந்த மகத்தான வேறுபாட்டை இனியேனும் அறிந்துகொள்ளும். இனி யாவது, ஆரியமாவது, திராவிடமாவது, எல்லாம் ஒன்றுதான், என்று பேசும் பிள்ளைப் பேச்சை விட்டுவிடும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் குருகுலப் போராட்டம் மூண்டெழுந்த போதே பார்ப்பனீயத்தின் நச்சுப்பல் எவ்வளவு

(12-ம் பக்கம் பார்க்க)

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 பங்குனி 27
9—4—49 சனிக்கிழமை

# ஓய்வு நாள் வந்தது! உயர்பணி புரிவோம்!

மாணவர் உலகிலே மட்டற்ற மகிழ்ச்சியை நடமாடச் செய்யும் நாள், கோடை! அந்தக் கோடை ஆரம்பமாகிவிட்டது!

கோடை என்றவுடனே மாணவப் பருவத்தைத் தாண்டிய மற்றையவர் நெஞ்சில் எல்லாம் உறுவது, வெப்பம்! ஆனால் மாணவர் உள்ளத்தில் வந்து நின்று நடனமாடும் எண்ணமோ, விடுதலை! முழு விடுதலை! கட்டுக் காவல் அற்ற விடுதலை! பள்ளிக்கூடம் என்னும் சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடக்க வேண்டிய அவசியமோ, பரீட்சை என்றும் தேர்வு என்றும் பலவாறாக அழைக்கப்படும் கடுங்காவல் தண்டனையை அனுபவித்துத் தீர வேண்டிய கட்டாயமோ துளியும் அற்ற விடுதலை!

"கோடையா! அப்பா!" என்று பெருமூச்சு விடுவர் பிறர்!

"கோடையா! நன்று நன்று" என்று புன்னகை பூப்பர் மாணவர்!

"கோடைக் காலம் வருகிறதா? வேதனை வேதனை" என்று சொல்லி முகத்தைச் சுளிப்பர், பிறர்!

"கோடைக் காலம்தானே! வரட்டும் வரட்டும்! அதன் வரவு நல்வரவு ஆகட்டும்!" என்று மொழிந்து உள்ளம் களிப்பர், மாணவர்!

"கோடைக் காலமா, உயிர் போகுமே!"—பிறர் கூறுவர் எரிச்சலோடு!

"கோடை நாட்களா, தென்றல் வீசுமே!"—மாணவர் எக்காளமிடுவர் தம்மை மறந்து!

"கோடை ஆரம்பமாகிவிட்டதா? சரி சரி! இனி அனலிடைப் பட்ட புழுக்கள் போலத் துடிக்கவேண்டியதுதான் நாம்"—முதியவர் மொழிவர்!

"கோடையா தோழா! வந்துவிட்டதா! இனி என்ன கவலை நமக்கு? சிட்டு எனப் பறக்கலாம், வானம்பாடிபோல் மிதக்கலாம், குயில் எனக் கூவலாம், மழை கண்ட மயில் எனத் துள்ளி மகிழலாம், சிரித்து விளையாடும் சிற்றாறு போல காலத்தைப் பற்றிய கவலையற்று குதித்து விளையாடிக் களிக்கலாம், அத்தகைய கோடையா வந்துவிட்டது! இன்பம் இன்பம்!"—மாணவர் கூவுவர்!

"கோடை! முதுவேனில்! எப்படித்தான் நாம் அனுபவித்துத் தீர்வது இந்தக் காலத்தை! வெயில் கொளுத்துமே, உடல் எரியுமே, வியர்வை கொட்டுமே, புழுக்கம் வேகுமே, வெளியே தலைகாட்ட முடியாதே, காட்டினால் மண்டை காய்ந்து போகுமே, வெளியே போகாமலோ இருக்கமுடியாதே"—இது, பிறர் பாடும் அந்தாதி!

"கோடை! இளவேனில்! நமக்கு மகிழ்ச்சி தரும் மனோகரபுரி! உலவலாம் இனி களிப்புடன் அவ்வுலகில்! இன்பபுரிப் பயணம் செய்யலாம் அச்சமின்றி! அலைந்து திரிந்து ஆடிப் பாடி மகிழலாம்! துள்ளிக் குதித்து விடுதலை துந்துமி பாடலாம்! மனம்போல வாழ்வு இனி நமக்கு!"—இது, மாணவர் உலக மனோகர வெண்பா!

ஆம்! கோடை என்றாலே குளிர் புனல் பருகினால் எனக் களிப்புறுவர் மாணவர், பிறரோ சுடு நெருப்பை மிதித்தாலென உள்ளம் சுருங்குவர்! ஆனால் கோடையின் வெப்பம் பிறரைத் தாக்குவது போலத்தான் மாணவரையும் தாக்கும்! பிறர்க்கு வியர்வை மழையெனக் கொட்டுவது போலத்தான் மாணவர்க்கும் கொட்டும்!

ஒரே கோடை மாணவபுரியினர்க்கு மட்டும் ஆநந்தத்தையும் பிறர்க்கெல்லாம் மன எரிச்சலையும் தருகிறது—காரணம் மாணவத் தோழர்கட்கெல்லாம் அது விடுமுறைக் காலம்! பிறர்க்கோ வழக்கம்போல வாழ்க்கைத் தீயில் வெந்து கருகவேண்டிய பருவம்! இவர்தம் நிலைமையில் காணப்படும் இம்மாற்றமே இவர் தம் நினைப்பில் தோன்றும் மாற்றத்திற்குக் காரணம்.

கோடை கொடிது என்பர் முதியவர், வெளியே தலை காட்டவே அஞ்சுவர், ஆகவே அவர்களால் இந்தக் காலத்தில் அரிய பணி ஏதும் ஆற்றமுடியாது. வேதனையும் புழுக்கமும் உடலை—ஆகவே உள்ளத்தையும்—வாட்டும் நேரத்தில் யார்தான் கடும்பணி புதிதாகப் புரிதல் கூடும்? ஆனால் மாணவர்கள் நற்பணி பல புரிய முடியும் இந் நாளில்! பரீட்சைகள் தீர்ந்து, பள்ளி வாசம் ஓய்ந்து, பாடப் புத்தகங்கள் பரண்மேல் சென்றிருக்கும் வேளை—எனவே இன்பம் அவர்களைத் தாக்கும் நேரம்! நாட்டின் நலத்தினை ஓம்பும் நற்பணி புரிதற்கான காலம்! இந்தக் கோடை விடுமுறை ஒன்றுதான் மாணவர்கட்கு முழு ஓய்வு அளிக்கும் காலம்—இந்த விடுமுறை தீர்ந்து, ஜூன் மாதம் பிறந்து, மூடிய கல்விக் கூடங்களின் கதவு மீண்டும் திறக்கப்பட்டுவிட்டால், பிறகு அவர்கட்கு அடுத்த கோடை வரை ஓய்வு இராது! பாடம், பரீட்சை, புத்தகம், பட்டம் முதலியன அவர்கள் நேரத்தை விழுங்கிவிடும். இடையே இருக்கும் இந்த ஓய்வு நாட்களில்தான் அவர்கள் நாடு வாழ, மக்கள் வளர, மொழி வளமுற, ஏதேனும் அரும்பணி ஆற்றமுடியும், ஆற்றலாம், ஆற்ற வேண்டும்!

இந்த நாடு, நம் நாடு! திராவிட நாடு! நம்மைப் பெற்றுவளர்த்த பொன்னாடு! இந்த நாட்டு நலத்திற்கான பணிபுரியவேண்டியது நம்

கடமை, திராவிடர் கடமை! திராவிட மாணவர் கடமை!

முச்சங்கம் கண்டு, முத்தமிழ் வளர்த்த, மூவேந்தர்கள் பொலிந்த நாடு இது ஆனால் இன்றோ டில்லி நோக்கித் தண்டனிடும் துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறது! திங்கள் வாழ்க, செங்கதிர் வாழ்க, தென்றல் வாழ்க, செந்தமிழ் வாழ்க என்று இயற்கையை, இயற்கையின் விளைவை வாழ்த்திய நாடு இது—இன்றோ ஜெய் ஹிந்த் என்றும் பந்தேமாதரம் என்றும் பொருளற்ற உரைகளை தமிழ்ச் சுவையற்ற முறையில் ஒலித்துக் கொண்டிருக்கிறது! ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்றே தமிழன் அன்றோர் நாள் எழில் மொழி புகன்றுகொண்டிருந்தான், இன்றோ, தமிழன் வாழ்வில், ஆயிரம் குலமும் ஆயிரமாயிரம் ஆண்டவர் உருவும் நடமாடத் தொடங்கி விட்டன. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது முன்னாளில் தமிழன் கண்ட இலட்சிய பூமி. ஆனால் இந்நாளிலோ தீண்டாமையும் பாராமையும் அண்டாமையும் நெருங்காமையும் தமிழர் சமுதாயத்தைச் செல்லரித்து வருகின்றன. இயற்கை இன்பத்தைப் பாடிய தமிழன் பொய்யை, புளுகை, புராணத்தைப் பாடவும், காதலையும் வீரத்தையுமே வாழ்க்கையின் அகமாகவும் புறமாகவும் கொண்ட தமிழன் பக்தியையும் பக்தியில் விளையும் மதப்பித்தையுமே வாழ்வின் இலட்சியமாகக் கொள்ளவும், அகநானூற்றையும் புறநானூற்றையும் நற்றிணையையும் நல்ல குறுந்தொகையையும் தீட்டிய கரங்கள் இராமாயணத்தையும் பாரதத்தையும் திருவிளையாடலையும் தலபுராணங்களையும் தீட்டும் அளவுக்குத் தாழ்ந்து போகவுமான துர்ப்பாக்கிய நிலை இன்று தமிழகத்தில் ஏற்பட்டுவிட்டது. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்ற மொழி மறைந்தது—பாழ் உலகம் பொய்யே பரமபதம் போ என்னும் சாக்குருவி வேதாந்தம் எழுந்தது! பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற பொன்மொழி மறைந்தது—ஆயிரம் உண்டிங்கு சாதி என்ற புன்மொழி எழுந்தது! எப்பொருள், யார், யார் வாய், கேட்பினும், அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு என்னும் குறள் மறைந்தது—"நம்பினால் மோக்ஷம், நம்பாவிட்டால் நரகம்" என்னும் வேதவாக்கு எழுந்தது. ஒத்த வயதும் ஒத்த கல்வியும், ஒத்த அழகுடன் ஒத்த உரிமையும் படைத்த நம்பியும் நங்கையும் வாழ்க்கைத் துணைவர்களாக தலைவன் — தலைவியராக வாழ்ந்த உயர்ந்த குடும்ப அமைப்பு குலைந்து—கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்றுரைக்கும் "சம்சார சாகரம்" உருவாயிற்று வாழ்க்கை என்றால் அது, இன்பம், அழகு, அறிவு, காதல், வீரம் என்னும் இவையும் இவை அனைய உயரிய சீரிய சிறந்த பண்புநலன்களும் பொதுளும் இலட்சியபூமி என்னும் கருத்து மறைந்தது; வாழ்க்கை என்பது சென்று போன ஏதோ ஒரு முன்ஜென்மத்திற்கும், இனி வர இருக்கும் ஏதோ ஒரு பின் ஜென்மத்திற்கும் இடையே இருக்கும் "இரயில்வே ஜங்ஷன்" என்று கருதும் இழிநிலை பிறந்தது. ஆம்! இன்றைய தமிழனின் வாழ்வு மூடநம்பிக்கை, குருட்டுப் பிடிவாதம், சாதி சமயப் பித்தம், பெண்ணடிமைக் கொடுமை, காதல் அற்ற சூன்யம், எண்ணத் தொலையாத—ஏட்டிலும் அடங்காத நீண்ட கடவுளர் பட்டியல், கல்வி அறிவின்மை, வடநாட்டுச் சுரண்டல், டில்லி தர்பார் ஆகிய இவ்வளவு புழுக்களாலும் அரிக்கப்படும் ஆபத்தான நிலையிலேயே உள்ளது. இந்த ஆபத்தான சூழ்நிலையை அகற்றி, புதிய தமிழகம் என்னும் இன்பத் திராவிடத்தை உருவாக்கும் உயர் பணியைத்தான் திராவிடர் கழகம் மேற்கொண்டிருக்கிறது. இந்த மறுமலர்ச்சிப் பணியில் கழகம் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான பல சக்திகள் தமிழகத்தில் உண்டு—அவற்றில் சில தமிழ், தமிழன், தமிழ்நாடு, தமிழருக்கும் சுயநிர்ணயம், என்பன போன்ற காதுக்கினிய சொற்களைக் கூறிக்கொண்டே அப்படிக் கூறிவிடுவதாலேயே அவர்களுடைய உண்மை உருவத்தைத் தமிழகம் உணர்ந்துகொள்ளாது என்று நம்பிக்கொண்டு, நம்முடைய மறுமலர்ச்சித் தொண்டை முறிக்க எண்ணுகின்றன. ஆரியர் ஒரு புறத்திலும், ஆளவந்தார்கள் ஒரு புறத்திலும், இத்தகைய "உடன்பிறந்தே கொல்லும் வியாதிகள்" மற்றொரு புறத்திலும் இருந்து கொண்டு நமது புரட்சிப் பணியைப் பொசுக்கவும் கூடும் என்று எண்ணமிட்டுக் கொண்டு, அதற்காக ஏதேதோ சதிகளையும் சூழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தவண்ணம் உள்ளன. இந்தச் "சில்லறை"களைப் பற்றி நமக்குச் சிறிதும் கவலையில்லை, நமது கவலையெல்லாம், எப்படியாவது, நம் நாடு, இன்பத் தமிழ் நாடு, இனிய திராவிடம், புதியதோர் உலகமாக, பொதுவுடைமை பூமியாக மாறிவிடவேண்டும் என்பதுதான். மாறிவிடவேண்டும் எனில் அது தானாக மாறிவிடாது, மாற்றிவிட வேண்டும்! மாற்றிவிடுவதற்கான அறப்பணியில்தான் ஈடுபட்டுள்ளது திராவிடர் கழகம். அந்தப் பணியில், பகுத்தறிவுப் பணியில், மக்கள் வாழ்க்கையில் கப்பிக் கொண்டுள்ள மூட இருளை ஓட்டும் பணியில், திருவள்ளுவர், சாக்ரடீஸ், புருனோ, இங்கர்சால், புத்தர், வால்டேர், பிராட்லா, ரூசோ, போன்ற பேரறிவாளர்கள் ஈடுபட்டிருந்த இணையற்ற பணியில் ஒரு சிறு பகுதியை, **கிடைத்துள்ள இந்த ஓய்வு நாளில்**, ஆற்ற வாருங்கள், தமிழகத்தை முன்னேற்ற வாருங்கள், வாழ்ந்துகெட்ட வளமார் திராவிடத்திற்கு நல்வாழ்வை நல்க வாருங்கள், அறிவு ஒளியை நாடெங்கும் பரப்ப வாருங்கள், ஈரோடு என்றால் என்ன என்பதை எவ்வெவர்க்கும் விளக்க வாருங்கள், தாய்த் திரு நாட்டுப் பணி புரிய வாருங்கள், வாருங்கள்—வாருங்கள், வாழிய செந்தமிழ் வாழிய திராவிடம் என இன்னொலி புரிந்த வண்ணம் ஓடி வாருங்கள் என்று திராவிட மாணவர் ஏறுகளை, குறிப்பாக, கல்லூரிகளில் பயிலும் கட்டிளங்காளைகளை, அதிலும் குறிப்பாக, மாணவத் தோழியரை அழைப்பதுதான் "போர்வாள்" இந்த வாரம் செய்ய எண்ணியிருக்கும் கடமை.

இந்த விடுமுறைக் காலத்தில், மாவட்டந்தோறும் சில மாணவர்களை அனுப்பி, பகுத்தறிவுப் பிரசாரம் புரிவதென்றும், இந்தப் பணியில் ஈடுபடும் திறமும் விருப்பமும் படைத்தவர்க்கு, ஈரோட்டில், **தலைவர் பெரியார்** அவர்களால், முதலில், இரண்டொரு நாட்கள் பயிற்சி அளிப்பதென்றும், இந்தப் பிரசாரத்திற்கு என்று 75 மாணவர்களைத் தெரிந்தெடுப்பது என்றும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் மிகவும் பயனுள்ளது—மாணவர்

கள் கட்டாயம் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தனிச் சிறப்புடையது—குறிப்பாக, மேடைப் பேச்சில் ஆர்வமும் ஆற்றலும் படைத்த மாணவர்கட்கு தங்கள் திறமையை வளர்த்துக் கொள்வதற்கும், தமிழகத்தின் வாழ்க்கையை வளமாக்குவதற்கும் கிடைத்துள்ள மிகவும் அரிய வாய்ப்பு இது—இதனைத் தவறவிடக்கூடாது மாணவர்கள்.

மேடைப் பேச்சு, இக் காலத்தில் பலம் பொருந்தியதோர் ஆயுதமாகிவிட்டது. இந்த ஆயுதத்தின் பலமும் தேவையும் பலனும் ஜனநாயகம் வளர வளர, மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகும். தமிழகத்தில் ஆல்போல் தழைத்து அடர்ந்த காடுபோல் வளர்ந்துள்ள மூட நம்பிக்கையை முறித்துத் தள்ள இந்த ஆயுதம் ஏற்கெனவே மிகவும் பயன்பட்டிருக்கிறது—இனியும் இதன் பயன் பெருகுமே தவிர குறையாது. எனவே மாணவர்கள் கரத்திலே இந்த ஆயுதம் இருக்கவேண்டியது அவசியம் என்பதையும், இந்த ஆயுதத்தைத் தட்டித் தீட்டிக் கூர்மையாக்கித் தர பெரியார் என்னும் ஒப்பற்ற உலைக் களத் தலைவர் முன் வந்திருப்பது மாணவர்கட்குக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய பேறு என்பதையும் நாம் உரைக்கத் தேவையில்லை—யார் அறியார் அதனை?

எவ்வளவு அதிகமான மாணவர்கட்கு இந்த ஆண்டு வாய்ப்பு அளிக்க முடியுமோ அவ்வளவு அதிகமான பேர்கட்கும் வாய்ப்பு அளித்தே தீரவேண்டும் என்று பிரசாரப் பயிற்சிக் குழுவினரை வேண்டிக் கொள்கிறோம்—அதே நேரத்தில், இந்தப் பிரசாரப் பணியில் ஈடுபட மாணவர்கள் கூட்டம் கூட்டமாக முன்வர வேண்டும் என்று அவர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஆனால் ஒன்று! மாவட்டத்திற்குப் பத்துப் பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தமிழகத்தில் உள்ள பத்து மாவட்டங்கட்குமாக மொத்தம் நூறு பேர்தான் தேவைப்படும். ஆனால் பகுத்தறிவுப் பணியாற்ற முன்வரும் மாணவர்களோ நிச்சயம் நானூறு அல்லது ஐந்நூறு மாணவர்கட்குக் குறையமாட்டார்கள். மேடைப் பேச்சின் மூலமாகப் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்படும் நூற்றுவர் போக ஏனைய மாணவர்கள், "நாங்களும் நாட்டுக்கு நற்பணி ஆற்றுதல் வேண்டாவா, எங்கட்கு வேலை இல்லையா, நாங்களும் இன்பத் திராவிடத்து மதலைகள்தானே, எங்கட்கும் வாய்ப்பு வேண்டும்" என்று கேட்கக்கூடும். கேட்கக் கூடும் என்பதென்ன, நிச்சயம் கேட்பார்கள். கேட்கவேண்டும் என்பதுதான் நம் ஆசைகூட.

கேட்டால் என்ன? கேட்கட்டுமே! வேலைதானா இல்லை—ஏராளமாக இருக்கிறது! ஐந்நூறு மாணவர்கள் மட்டுமல்ல, ஐயாயிரம் மாணவர்கள் முன்வருவதானாலும் சரியே, அவ்வளவு பேர்க்கும் வேலை இருக்கிறது; ஐயாயிரம் மாணவர்கள் முன்வந்திட்டாலும் வேலைகளை முற்றிலும் செய்து முடிக்க ஆள் இல்லை என்ற நிலைதான் இருக்குமே தவிர வேலை இல்லை என்ற நிலை இராது—செய்யப்பட வேண்டிய, ஆனால் செய்யப்படாமல் இருக்கின்ற வேலைகள் அவ்வளவு அதிகம் தமிழகத்தில்! ஆளவந்தார்கள் செய்திருக்க வேண்டிய ஆனால் செய்யாமல் இருக்கின்ற, "தேசியவாதிகள்" செய்திருக்கவேண்டிய ஆனால் செய்யாமல் இருக்கின்ற, கம்யூனிஸ்ட் நண்பர்கள் செய்திருக்க வேண்டிய ஆனால் செய்யாமல் இருக்கின்ற, திராவிடர் கழக முதியவர்கள் செய்திருக்க வேண்டிய ஆனால் செய்யாமல் இருக்கின்ற, புலவர்களும் பட்டதாரிகளும் டாக்டர்களும் பேரறிஞர்களும் பல்வேறு அரசியல் தலைவர்களும் செய்திருக்க வேண்டிய ஆனால் செய்யாமல் இருக்கின்ற வேலைகள் அவ்வளவையும் கூட்டிப் பார்த்தால் செய்யப்பட வேண்டிய வேலை இமயமலை அளவு இருப்பதும் செய்துள்ள வேலை சிறு குன்றளவுதான் என்டதும் நன்கு தெரியும்—ஆகவே மாணவர்கள் வேலை இல்லையே என்று மனம் உடையத் தேவையில்லை!

நலிவுற்றுக் கிடக்கும் நாட்டு மக்கள் வாழ்க்கையைச் சீர்திருத்துவதற்கு மேடைப் பேச்சு ஒரு பலமுள்ள ஆயுதம்தான். ஆனால் அது ஒன்றுதான் பலமுள்ள ஆயுதம் என்றோ அதைவிட பலமுள்ள ஆயுதம் வேறு இல்லை என்றோ எவரும் எண்ணிடத் தேவையில்லை. ஆயுதங்கள் பலப்பல உண்டு—அவற்றில் ஒன்றுதான் மேடைப் பேச்சு!

நம் சமுதாயத்தில் உள்ள மிகப் பெரிய கறை—பிற நாட்டவர் கண்டு எள்ளி நகையாடுகின்ற கறை — பெவர்லி நிகோலாஸ்கள் சுட்டிக்காட்டி சுடுசொற்களை வீசுதற்கு ஏற்றபடி உள்ள முக்கியமான கறை, கல்வியறிவின்மை! நூற்றுக்குப் பத்துப்பேரே இங்குப் படித்தவர்கள். பிறரெல்லாம்—"கைநாட்டுகள்"! திராவிட மாணவர்கள், இந்த ஓய்வு நாளில், இக் கல்வியறிவின்மையைப் போக்க நற்பணி புரியமுடியும். மாணவர்கள் பத்துப் பத்துப் பேர்கொண்ட தனித்தனி குழுவினராகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவினரும் ஒவ்வொரு கிராமத்திற்குச் சென்று தங்கினால், தமிழ் மொழியை எழுதவோ படிக்கவோ அறியாமல் இருக்கின்ற அவ்வூர் **முதியவர்கட்கு** இரண்டு மாத காலத்திற்குள்ளாக எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்துவிடலாம் மாணவர்கள். இதற்கென்று தனிக் கட்டிடம் தேவையில்லை—கிராமச் சாவடியையோ, பொதுச் சத்திரத்தையோ, ஆற்றோரத்தையோ, அகன்ற ஆலமரத்தடியையோ, அழகிய மாந்தோப்புகளையோ, செப்பம் செய்யப்பட்ட மண்மேடையோ அல்லது (அறுவடைக் காலமாக இல்லாமலிருந்தால்) களத்துமேடு முதலிய இடங்களையோ இதற்கென்று பயன்படுத்திக்கொள்ளலாம் — மாலை நேரத்தில், முதியவர்கள், தத்தம் தொழிலை முடித்துக்கொண்டு ஓய்வு பெறும் நேரத்தில் இந்த முதியவர் வகுப்பை திராவிட மாணவர்கள் நடத்தலாம்.

சில முதியவர்கள் இருப்பர் எழுத்துக் கூட்டிப் படிக்கவும் எழுதவும் மட்டும் தெரிந்தவர்கள்—தம் இளமைப் பருவத்தில் இரண்டாவது அல்லது மூன்றாவது வகுப்புவரை மட்டும் படித்து, பிறகு படிப்பு என்பதையே மறந்துவிட்டவர்கள், இவர்களுக்கு எழுத்தறிவைத் தரத் தேவையில்லை—கல்வியறிவைத் தரவேண்டும். பல்வேறு நாடுகளின் அமைப்பு, வளர்ச்சி, மக்கள் வாழும் விதம், ஆட்சி நடைபெறும் முறை, பற்பல நாடுகளின் தராதர பலம், அதன் பலனாக இன்று ஏற்பட்டுள்ள உலக அரசியல் நிலைமை, விஞ்ஞானத்தின் வெவ்வேறு துறைகள், அவை வளர்ந்த விதங்கள், வளர்த்த பேரறிஞர்களின் வரலாறுகள், விஞ்ஞானத்தின் தேவை, நன்மை, தமிழகத்தின் வரலாறு, தமிழ் இலக்கிய

சிறப்பு, செங்குட்டுவன் — இராஜேந்திரன்—இராசராசன்—கரிகாலன்—ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் போன்ற நம் முன்னோரின் சிறப்பு, சங்க இலக்கியத்தின் எழில், நம் உடல் அமைப்பு, முக்கிய நோய்கள் பரவும் விதம், அவற்றைத் தடுக்கும் விஞ்ஞான வழிமுறைகள் போன்ற பல்வேறு பொருள்களைப்பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவதன் மூலமாக முதியவர் கல்வியை வளர்க்கலாம். எழுத்தறிவு மட்டும் பெற்றுள்ள முதியவர்கள் மட்டுமல்ல, எழுத்தறிவே பெறுத— பெற விருப்பமோ ஓய்வோ இல்லாத முதியவர்கள்கூட இத்தகைய அறிவு விளக்கச் சொற்பொழிவுகளை ஒருபோதும் கேட்கத் தவறார்.

தமிழகத்தில் உள்ள எத்தனையோ கிராமங்களில், அங்கு வாழும் மக்களுக்கும் வெளி உலகத்திற்கும் தொடர்பே இல்லாமல் இருக்கின்றது—காரணம் ஒரு வாரப்பத்திரிகைகூட அந்தக் கிராமங்களை எட்டிப் பார்ப்பதில்லை! வார இதழே வருவதில்லை எனில் நாளிதழ் எங்கே வரப்போகிறது! கிழமைத்தாளோ நாளிதழோ கூட காணாதவர்கள் புத்தகங்களை வாங்கிப் படித்தா உலகப் போக்கை உணரப் போகிறார்கள்! எனவே உலகம் இத்தகு கிராமங்களை விட்டு விலகி இருப்பதில் வியப்பேது? இத்தகு கிராமங்களில் இரண்டாவது வகுப்புவரை எப்போதோ இருபது ஆண்டுகளுக்கு முன்னால் "கல்வி" பயின்று, அந்த அளவிலே படிப்புக்கும் தமக்கும் இருந்த உறவைக் கத்தரித்துக் கொண்டு விட்டவர்கள், எப்படி தம் எழுத்தறிவை மறவாதபடி நிலை நாட்டிக்கொள்ளல் இயலும்? எனவே எழுத்தறிவு படைத்தவர்கள் அந்த அறிவை மறந்துவிடாமல் இருப்பதற்கும், மேலும் வளர்த்துக் கொள்வதற்கும் ஏதேனும் ஒரு வழி செய்யப்பட்டாகவேண்டும். இத்துறையிலும் மாணவர்கள் உருவான பணி ஆற்ற முடியும். மாணவர்கள் பற்பல கிராமங்களுக்குச் சென்று தங்கி, ஆங்காங்குள்ள பெரியவர்களையும் முக்கியஸ்தர்களையும் கண்டு, வாசக சாலைகளையும் நூல் நிலையங்களையும் அவ்வூர்களில் ஏற்படுத்த முயலலாம். வாசகசாலை இரண்டொரு வார வெளியீடுகளை மட்டுமே வரவழைப்பதாக இருந்தாலும் போதும்; நூல்நிலையம் ஒரு நூறு புத்தகங்களை மட்டுமே கொண்டதாக அமையினும் சாலும், எப்படியேனும், எவ்வளவு சிறு அளவிலேனும், ஏற்படவேண்டும் என்பதுதான் முக்கியம். மாணவர்கள், முதியவர் கல்வியைப் பரப்பும் ஊரில் இவற்றை ஏற்படுத்துவது எளிது, அக்கம் பக்கங்களிலுள்ள ஊர்களில் ஏற்படுத்த முயன்றால் பெரிதும் வெற்றி பெறலாம். இப்படி அமையும் படிப்பகங்களும் நூல்நிலையங்களும் கிராமத்தவர்கள் பெற்றுள்ள எழுத்தறிவை மட்டுமல்ல, அவர்களுடைய உலகியல் அறிவை வளர்க்கவும் பெரிதும் பயன்படும்.

சில மாணவர்கள் கிராம சுகாதார ஏற்பாடுகள் சிலவற்றையேனும் சில கிராமங்களிலேனும் ஏற்படுத்த முயலலாம். விளக்கு இல்லாத கிராமங்கள், ஏராளமாக உண்டு நம் நாட்டில். முக்கியமாக, கிராமத் தலைவர்களைக் கலந்து, முக்கிய இடங்களிலேனும், இரவில் விளக்குகள் எரிய, மாணவர்கள் ஏற்பாடு செய்யலாம்.

தமிழில் சிறந்த பயிற்சியும் திறமையும் உள்ள மாணவர்கள், குறிப்பாக பி. ஓ. எல் அல்லது புலவர் வகுப்பு மாணவர்கள் கிராமங்களுக்குச் சென்று, **இரண்டு மாத கால தமிழ் வகுப்புகள்** நடத்தலாம். இவ் வகுப்புகளில் எட்டாவது வகுப்புவரை படித்துள்ள மாணவர்களையும் முதியவர்களையும் சேர்த்துக்கொண்டு திருக்குறள் முதலிய எளிய நடை இலக்கியங்களை அவர்கட்கு அறிவுறுத்தலாம். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, அகம், புறம், கலித்தொகை முதலிய சங்க நூல்களின் உள்ளுறையை பொதுப்படையாக ஏழெட்டு சொற்பொழிவுகள் மூலமாக எடுத்துக்காட்டலாம். கிராம மக்களிடையே புராண ஏடுகளுக்கு உள்ள செல்வாக்கை ஓரளவேனும் குறைக்க இப்பணி பெரிதும் பயன்படும்.

கொஞ்சம் செல்வாக்கும், செல்வாக்கைத் தேடிக்கொள்ளக்கூடிய சக்தியும் உடைய மாணவர்கள், கிராமங்களில், சிறிய அளவில், முடியுமானால் கொஞ்சம், பெரிய அளவில் சுயமரியாதைப் பொருட்காட்சிகள் (Exhibitions) நடத்தலாம். இவற்றில் விஞ்ஞான வளர்ச்சியைப் பற்றியும் உலக முன்னேற்றத்தைப் பற்றியும் நன்கு விளக்கும் சித்திரங்கள், சிற்பங்கள், விளக்கப் படங்கள், சிலைகள், புத்தகங்கள் முதலியவற்றை வைக்கலாம். உலகைத் திருத்திய பல உத்தமர்களின் வாழ்க்கையைப் படங்கள் உருவில் காட்டலாம். புதுவது புனைந்த அறிவியல் அறிஞர்களின் சாதனைகளையும் அவற்றால் விளைந்த நன்மைகளையும் எடுத்துக் காட்டலாம். ஆர்க்கிமிடிஸ், கலிலியோ, நியூடன், ஈன்ஸ்டின், எடிசன் போன்ற விஞ்ஞானிகள், லூயி பாஸ்டர் போன்ற மருத்துவத் துறையில் பெரும் பயன் விளைத்தவர்கள், ஆப்ரகாம் லிங்கன், தாமஸ் ஜெபர்சன், கரிபால்டி, மசாரிக், லெனின் மார்க்ஸ், பெர்னாட்ஷா, எச். ஜி வெல்ஸ், வால்டேர், கார்க்கி, போன்ற தலைவர்கள் — அறிஞர்கள், பல நோய்களைக் கண்டு பிடிக்கும் வகைகள், அவற்றிற்கு விஞ்ஞானிகள் மாற்று தேடிய வசீகர வரலாறுகள் போன்றவற்றை எல்லாம் சித்திரங்களாவும் சிறு சொற்பொழிவுகள் மூலமாகவும் விளக்கக் குறிப்புகள் மூலமாகவும் எடுத்து விளக்கலாம். நூறு பொதுக்கூட்டங்களைவிட இப்படி நடத்தப்படும். ஒரு பொருட்காட்சி அதிக பலனுடையதாகவும், கிராமத்தவர்கள் உள்ளத்தை நம் பக்கம் திருப்பிவிடும் ஆற்றல் படைத்ததாகவும் இருக்கும் என்பது உறுதி. மாரியம்மன் பண்டிகை, நெருப்பு மிதி திருநாள், பாரதக் கச்சேரி, திரௌபதை விழா போன்றவை பெரிதும் உற்சாகத்திற்காகவும், ஒருவித திருப்திக்காகவும், நாளெல்லாம் உழைத்து உழைத்து ஓய்ந்து போன உடலத்திற்கும் உள்ளத்திற்கும் கொஞ்சம் 'டானிக்' கொடுத்தாற்போன்ற சுறுசுறுப்பு ஏற்படுவதற்காகவும், ஒரே போக்கில் தொழிலில் சூழ்நிலையில் சென்று கொண்டிருந்த மனதை வேறு பக்கம் திருப்புவதற்காகவும் (as a sort of diversion) தான் கொண்டாடப் படுகின்றனவே தவிர பக்திக்காக அல்ல. எனவே, ஆண்டுதோறும் முக்கிய இடங்களில் சுயமரியாதைப் பொருட்காட்சிகளை நடத்துவது என்று நாம் தொடங்கிவிட்டால் கிராமங்களில் மாரியம்மன் முதலிய திருவிழாக்களுக்கு உள்ள 'மகத்துவம்' வெகுவாகக் குறைந்து விடுவதை ஒரு சில ஆண்டுகளுக்குள் நாம் காணமுடியும். மாவட்ட

(11-ம் பக்கம் பார்க்க)

( 3-ம் பக்கத் தொடர்ச்சி )

இந்த சமயத்தில் வாசலில் காவல்புரிந்த வாமனு ஓடிவந்து, "குருதேவ்! பசுக்கூட்டம் வருகிறது" என்று எச்சரிக்கை செய்தான்.

உடனே பூதேவர்கள் எல்லோரும் கண்ணியமாகத் தங்கள் வழக்கமான பீடங்களில் உட்கார்ந்துகொண்டனர்.

பக்தர்கள் தினமும்போல் தட்டுகளில் காணிக்கைப் பொருள்களைக் கொண்டுவந்து வைத்து வணங்கி நின்றனர். பூசாரி வழக்கம்போல் பூசைகள் செய்து பூதேவர்களை அமுது செய்தருளும்படி வேண்டிக் கொண்டான், ஆர்யா தவிர மற்றவர்கள் வழக்கம்போல் வயிறார உண்டு களித்தனர்.

அன்று கூட்டத்தில் ஊராளியும், செட்டியப்பனும், பெத்தியண்ணனும் இல்லை, சில புதிய பக்தர்கள் அதிகமாக வந்திருந்தனர்.

மணி எட்டுக்கும் மேலாகி விட்டது. பக்தர்கள் புறப்படும் சமயம். அப்போது ஒருவன் ஓடோடியும் வந்து பூசாரியின் காலில் விழுந்து, 'ஐயோ! பூசாரி யண்ணு, இனி எப்படி நாம் பிழைப்போம்? வந்ததே நம் தலைக்குக் கல்லு!" என்று சொல்லி நடுங்கினுன்.

பூசாரி: [அவனைப் பார்த்து] "என்னடா சமாச்சாரம்? என்ன ஆபத்து? பயப்படாதே! அதோ பார் நம்ப லோகநாதசாமி இருக்கும்போது நமக்கு என்னடா ஆபத்து வரும்?" என்று சொல்லி ஆர்யாவைக் கிண்டலாகப் பார்த்தான்.

வந்த ஆள்: இவரல்ல லோகநாதசாமி, ஊர்லே, லோகநாத சாமி, கடுங்கோபமாய்ப் புறப்பட்டுக் கோவிலுக்கு வந்திட்டிருக்குது" ஊர்ப்பக்கம் கையை நீட்டிக் கொண்டு நடுங்குகிறுன்.

பூசாரி: லோகநாதசாமி இங்கே இருக்கிறுர்டா. என்ன பார்த்தயோ அதை விபரமாய்ச் சொல்லித்தொலை.

வந்தவன் பூதேவர்களைப் பார்க்கிறுன். திகைக்கிறுன். "எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. இன்னிக்கு பொழுது விடிந்து ஒரு நாழிகைக்கெல்லாம் நீங்க கோயிலுக்கு வந்த பிறகு, வடக்[illegible]ரி யாத்தா கோயிலிலிருந்து ஒன்பது சாமிகள் ஒரே நீல நிறமா, ஆகாயத்துக்கும் பூமிக்கும் தொட்டுக் கொண்டு, ஊருக்குள் வந்தது. ஒவ்வொன்றும் ஒரு கையிலே பெரிய வேலும், இன்னொரு கையில் தீவட்டியும் வைத்திருந்தது. நான் என் கண்ணுரைப் பார்த்தேன். ஊரிலுள்ள பெண்டு பிள்ளைகள் குழந்தை குஞ்சுகள் எல்லாம் நடுங்கி வீடுகளுக்குள்ளே தாழ் போட்டுக் கொண்டதுகள். உனக்குத் தகவல் சொல்லலாமென்று ஓட்டமாய் ஓடி வந்தேன்! ஐயையோ பூசாரி! எப்படி நாம் பிழைப்போம் இனி?"

பூசரரி: தம்பி, பொறு பொறு! அந்த உருவங்கள்தான் லோகநாத சாமியும் அவர் பரிவாரங்களும் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?

வந்தவன்: எப்படித் தெரிஞ்சுதா?! அதுகளே சொல்லியிட்டு உறுமியிட்டு மலையேறி வருதே தெரியாதா?

பூசாரி: என்னடா சொல்லீட்டு வருதுக சொன்னதைச் சொல்லேண்டா, ஏண்டா முழிக்கிறே?

வந்தவன்: "என்னைப்போல வேஷம் போட்டுக்கிட்டு என்னுடைய கோயிலில் இருந்துகிட்டு ஜனங்களை ஏமாற்றியிட்டிருக்கிற பரதேசிப் பசங்களைப் பார் இன்னும் அரைநாழிகைக்குள் என்ன செய்யறேண்ணு! குடலைப் பிடுங்கி மாலை போடாவிட்டால் நான் லோகநாத சாமி யல்ல" என்று கடுங் கோபமாய் வருது. பார் வந்துட்டாப்பிலே சத்தம் கேட்குது என்று சொல்லி நடுங்குகிறுன்.

சிலர் கோபுர வாசலில் போய்க் கீழே பார்க்கின்றனர்.

தூரத்தில் சிலர் தீவட்டிகள் மேல் ஏறிக்கொண்டு வருவது தெரிகிறது. சப்தமும் கேட்கிறது.

பூதேவர்களும் போய் கவனிக்கின்றனர்.

பக்தர்களில் சிலர் தங்களைக் காப்பாற்றும்படி பூதேவர்களிடம் முறையிடுகின்றனர்.

பூதேவர்களில் ஆர்யா தவிர மற்றவர்கள் கிடுகிடுத்துப் போய் மருண்டு விழிக்கின்றனர்.

ஆர்யா மட்டும் மனக்கிலேசத்தை முகத்தில் காட்டிக் கொள்ளாமல்—"சோதனை நாள்—சோதனை நாள்—இன்றே" என்று பாடுகிறுன். பாடி முடிந்ததும், தன் [illegible]வர்களைப் பார்த்து "தேவர்காள், இன்று நமக்குச் சோதனை நாள். யாரோ இராட்சதர்கள் நம் மீதுள்ள ஜென்மப் பகையைப் பாராட்டிக்கொண்டு நம்மை ஓட்டிவிட வேண்டும் என்று வருகிறுர்கள். நாம் இவர்களுக்கு பயப்படக்கூடாது இந்த ராட்சசக் கூட்டத்தை வெல்வதற்கு நாம் குளத்திற்குச் சென்று தவம் செய்து நம் தேவ சக்திகளை ஜலத்தில் நின்று ஏவுவோம். வாருங்கள் குளத்திற்குப் போவோம்" என்றவுடன் எட்டு பூதேவரும் ஆர்யாவுடன் குளத்திற்குப் போய், இடுப்பளவு தண்ணீரில் இறங்கி ஏதோ ஜபதபங்கள் செய்வதாகக் காட்டுகிறுர்கள். இதற்குள் "இராட்சதக் கூட்டம்" மலையுச்சிக்கு வந்து கோயிலுக்கும் வந்து விட்டது இவர்கள் போடும் ஆங்காரக் கூச்சலைக் கேட்டுக் குளக்கரையில் நின்ற ஊர் மக்கள் நடுங்குகின்றனர். பூதேவர் இப்பொழுது கழுத்தளவு ஜலத்தில் நின்று தபம் செய்கிறுர்கள். ஆர்யா, "இராட்சதர் அழிக, ஒழிக வீழ்க" என்று தண்ணீரிலிருந்து ஜபிக்கிறுன்,

கோவில் வாயிலில் இருந்த மக்கள் கூட்டம் குளக்கரைக்கு ஓடிவருகிறது. இவர்களைத் தொடர்ந்து புதுச்சாமிகளும் ஒவ்வொன்றும் 30 அடி உயரத்தோடும், ஒருகையில் நீண்டவேலுடனும், ஒரு கையில் தீவர்த்தியுடனும் குளக்கரைக்கு வருகின்றன, அசாதாரணமான இவ்வுருவங்களைக்கண்ட பூதேவர்கள் நடுங்குகின்றனர். ஆர்யா, "சகோதரர்களே! இந்த ராட்சசரை வெல்ல முடியாது. பின்புறமாகவே நீந்திச் சென்று எதிர்க்கரையில் ஏறி வேறு நாட்டிற்போய் பிழைக்கலாம். நல்ல இருட்டானதால் நாம் தப்பித்துக் கொள்ளலாம்." என்று சொல்லி நீருள் மூழ்கி மறைந்துவிடுகிறுன். மற்றவர்களும் அவ்வாறே மூழ்கிச் சிறிது தூரம் போய் நீந்திக்கொண்டு இருட்டில் மறைந்துவிடுகின்றனர். பூதேவர் ஒழிந்தனர். வந்தவர்கள் தங்கள் பொய்க்கால்களை விட்டிறங்கிக் குளத்துக்குள் இறங்கிப் பூதேவரைத் தேடுகின்றனர். அப்போது அவர்கள் காலில் ஏதோ சில சிலைகள் தட்டுப்படுவதுகண்டு மிக்க வியப்புடன் அவற்றை எடுத்துப் பார்க்கின்றனர். ஆ! என்ன வியப்பு! கோயிலிற் காணுமற்போன சிலைகள்! அச் சிலைகளைக் கண்டதும், பூதேவர்களின் சூழ்ச்சி முழுவதும் அவர்களுக்குத் தெற்றெனப் புலப்படுகிறது. மாலூர் வாசி

(12-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிடர் கழக நிர்வாகிகள் மாணவர்களுடன் ஒத்துழைப்பார்களானால் இத்தகைய பொருட்காட்சிகளை நடத்துவது அப்படியொன்றும் பிரமாதமான காரியமல்ல. இந்த பொருட்காட்சிகளை ஊர்விட்டு ஊர் எளிதில் மாற்றக்கூடிய முறையில் அமைத்துவிட்டால் ஒரே பொருட்காட்சியை அதிக செலவும் சிரமமுமின்றி பல ஊர்களிலும் காட்டுவது எளிது. பயனும் அதிகம்.

நகரங்களில் வாழும் மாணவர்கள் செய்யக்கூடிய ஒரு முக்கியமான வேலை, கடைவீதிகளுக்கு, பத்து அல்லது இருபது மாணவர் கொண்ட ஒரு குழுவினராகச் சென்று, தமிழில் பேயர் தீட்டப்படாமல் ஆங்கிலம் இந்தி முதலிய ஏதோ வேற்று நாட்டு மொழிகளால் தீட்டப்பட்டுள்ள கடைப் பெயர்களை தமிழில் தீட்டுமாறு வேண்டிக்கொள்வது. தமிழில் பெயர் தீட்டப்பட்டுள்ள பலகைகளிலும், இராமசாமி என்பது **ருமசாமி** என்றும், முதலியார் என்பது **மோதெலியார்** என்றும், படையாட்சி என்பது **படையாக்ஷி** என்றும், காட்சி என்பது **காக்ஷி** என்றும், வெண்ணெய் என்பது **வெண்ணை** என்றும், "இங்கு கிடைக்கும்" என்பது **இன்கு கிடைக்கும்** என்றும் உள்ள பிழைகளைத் திருத்துமாறு வேண்டிக் கொள்ளலாம். கடைப் பெயர்களில் இராமசாமி **நாயுடு** கடை, கிருஷ்ணசாமி **படையாட்சி** கடை, முத்துரங்க **முதலியார்** அண்டு சன்ஸ், பரமேஸ்வர **அய்யர்** ஹோட்டல் என்பது போல உள்ள சாதிப் பெயர்களை விலக்கி விடும்படியும் கேட்டுக் கொள்ளலாம். தமிழ்ப் பிழை திருத்த ஊர்வலம், சாதிப் பெயர் ஒழிப்பு ஊர்வலம் என்பனபோன்ற ஊர்வலங்களையும் நடத்தலாம்.

நகர மாணவர்கட்கான மற்றொரு யோசனை! பங்கீட்டு அட்டை பெறுவது, புதிதாக வந்தவர்கட்கு பங்கீடு கூடுதலாகப் பெறுவது, வெளியூர் போய்விட்டவர்களின் பங்கீட்டைக் குறைப்பது போன்ற பல அன்றாட ஆனால் மிக முக்கியமான செயல் முறைகளை முடிக்க அறியாமல் ஏழைகள் பலர் திண்டாடுவதும், இத் திண்டாட்டத்தை பங்கீட்டு அலுவலகங்களில் உள்ள அலுவலர்களின் அலட்சியமும் ஏனோதானோ போக்கும் பொறுப்பற்ற நடப்பும அதிகமாக வளர்ப்பதும் தினசரி நாம் காணும் ஒரு சம்பவம். துணைபுரிவோர் கழகம் [Friend-in-need Society] போன்றவற்றை அமைத்து, மாணவர்கள், இந்த ஓய்வு நாளில், பங்கீட்டு அட்டைத் திருத்தம் போன்ற துறைகளில் ஏழைகட்கு நல்ல துணைபுரியலாம்—புரியவேண்டும்.

தமிழகத்து நகரங்களில், குறிப்பாக சென்னையில், மார்வாடி குஜராத்தி மூல்தானி சிந்திபோன்ற வடநாட்டவர்களின் நகைக் கடைகள், துணிக்கடைகள், லேவாதேவிக் கடைகள், மிட்டாய் கடைகள், ஓட்டல்கள், சீட்டு பண்டுகள் முதலியன ஏராளமாக இருக்கின்றன. மாணவர்கள் பல குழுவினராகப் பிரிந்து ஒவ்வொரு குழுவினரும் நகரத்தின் ஒவ்வொரு வட்டாரத்தை தத்தமக்கென்று குறித்துக்கொண்டு, அந்த வட்டாரத்தில் உள்ள இதுபோன்ற வட நாட்டவர் கடைகளையும், பிற வணிக நிலையங்களையும், பாங்கிகள் இன்சூரன்ஸ் கம்பெனிகள் போன்றவற்றையும் கணக்கெடுக்கவேண்டும். சென்னை மாணவர்கள் இத் துறையில் அரிய பணி ஆற்ற முடியும். ஊர்தோறும் இதுபோல வடநாட்டவர் சுரண்டல் பட்டியல் தொகுக்கப்பட்டு, பிறகு இப்படி தொகுக்கப்படும் ஊர்ப் பட்டியல்களைக்கொண்டு மாவட்டப் பட்டியல்கள் தொகுக்கப்பட்டு, பிறகு அவற்றைக்கொண்டு தமிழகத்துப் பட்டியல் தொகுக்கப்படவேண்டும். திராவிட மாணவர்களும், திராவிட மாணவர் கழகங்களும், திராவிட மாணவர் கழகத் தலைமை அமைப்பும் இத்துறையில் முழுமூச்சாக ஈடுபடுமானால் இந்தக் கோடை விடுமுறையில் இத்தகைய அரிய பட்டியலை எளிதில் தொகுத்தல் கூடும். அப்படித் தொகுக்கப்பட்டால், அது, திராவிட நாட்டுப் பிரிவினை கட்டாயம் ஏற்பட்டே தீரவேண்டும் என்பதற்கான அசைக்கமுடியாத ஆதாரமாக அமையும். அந்தப் பட்டியல் தொகுக்கப்பட்டு விட்டால், தொகுத்து அதனை நூல் வடிவிலும் தந்துவிட்டால், அந்த நூலை சென்னை அமைச்சர் குழுவுக்கும், "திராவிட நாடா—தனி அரசா—எதற்காக?" என்று இன்னமும் அரிச்சுவடிக் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கும் சில "அகில இந்தியா"க்களுக்கும் அனுப்பி வைத்துவிட்டால், பிறகு, திராவிட நாட்டுத் தனி அரசு வேண்டும் என்று நாம் பேசத் தேவையில்லை—புள்ளி விவரம் பேசும்!

திராவிட மாணவர்கள் இந்த ஓய்வு நாளில் ஆற்றக்கூடிய எளிய ஆனால் அரிய பணிகள் இதுபோல ஏராளமாக இருக்கின்றன. பொருட்காட்சி அமைப்பது ஒன்றைத் தவிர ஈண்டு நாம் எடுத்துக் காட்டியுள்ள பிற வேலைத் திட்டங்கள் யாவும் மாணவர்களால், சிறிதளவு முயற்சியும் கொஞ்சம் துணிச்சலும் மட்டும் இருக்குமானால், தாராளமாகச் செய்யப்படக் கூடியவையே! இந்த வேலைத் திட்டங்களை நடைமுறைக்கீதமாக மாற்றுவதில் உள்ள சிரமம் குறைவு, மிகக் குறைவு! ஆனால், பலன் அதிகம்; மிக அதிகம்! நாம் இத்தகு நற்பணிகளைப் புரிவது, நம்மை அழிவு வேலைக்காரர்களே தவிர ஆக்க வேலைக்காரர்கள் அல்ல என்று தூற்றுகிறார்களே சில சூது மதியினர் அவர்கட்குச் சரியான சவுக்கடி கொடுத்தது போல இருக்கும். அதே நேரத்தில் கிராம மக்களிடம் நமக்கு, நேருக்கு நேராக நெருங்கிப் பழகும் நல்ல வாய்ப்பும் வசதியும் கிடைக்கும். மேடைப் பேச்சின் மூலமாகக்கூட நமது பிரசாரம் ஓரளவுக்கு மக்கள் மனக் கதவைச் சென்று தட்டுமே தவிர, இதுபோல, மக்கள் உள்ளமும் நம் உள்ளமும் ஒன்றுடன் ஒன்று தாராளமாகக் கலந்து உறவாடும் தோழமை என்பது ஏற்படுவது அவ்வளவு எளிதல்ல. சமூக சீர்திருத்த மன்றமாக இருப்பதோடு அதே நேரத்தில் அரியதோர் அரசியலில் கட்சியாகவும் இருக்கும் திராவிடர் கழகத்திற்கு மக்களிடம் ஏற்படும் இத்தகைய நேர்முகத் தொடர்பு எதிர் காலத்தில் எவ்வளவு பயன்படும் என்பதை அரசியல் விவேகம் உடையார் எவரும் அறிவர்.

மாணவ மணிகளே! உங்கள் கோடை விடுமுறை இதோ துவங்க இருக்கிறது! ஆம், சிலருக்கு ஏற்கெனவே துவங்கியும் விட்டது! இனியும் தாமதிக்காதீர்கள். மேடைய பேச்சிலே ஆர்வமுள்ளவர்கள், ஆற்றல் உள்ளவர்கள், ஆற்றலை வளர்க்க விழைபவர்கள் அனைவரும் **பெரியார்** அவர்களால் துவக்கப்பட இருக்கும் பிரசாரக் குழுவிலே சேர வாருங்கள். மேடைப் பேச்சிலே விருப்பமில்

லாதவர்கள், இடமின்மை காரணமாக பிரசாரக் குழுவில் சேர வாய்ப்புப் பெறாதவர்கள் இன்னபிறர், மேலே குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு நற்பணியை ஆற்ற வாருங்கள். "ஓய்வுநாள் வந்தது—உயர் பணி புரிவோம்" என்ற முழக்கமிட்ட வண்ணம் முத்தமிழை நாடெங்கும் ஒலிக்க வாருங்கள்! பகுத்தறிவை, புத்தொளியை, புரட்சிக் கதிரை, எங்கெங்கும் பரப்ப வாருங்கள்! நாடு உங்களை எதிர்பார்க்கிறது, உங்களைத்தான் எதிர்பார்க்கிறது, எனவே உங்கள் பணியை ஆற்ற நீங்கள் வாருங்கள். பெரியார் அழைக்கிறார், நம் தந்தை அழைக்கிறார், இன்பத் திராவிடத்தின் இணையற்ற தலைவர் அழைக்கிறார்—அந்த அன்பழைப்பை ஏற்க வாருங்கள். ஓய்வுக்காலம், கிடைத்தற்கரிய காலம்! அந்தக் காலத்தை உயர் பணிக்கு உடமை ஆக்குங்கள்!—நாடு செழிக்கட்டும் அதன் மூலம்.

—

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அனைவரும், இதுநாள் வரை தங்களை ஏமாற்றி வஞ்சித்துவந்த ஒன்பது எத்தர்களைத் தேவர்கள் என்றெண்ணி பூஜித்து வந்த தங்கள் மடமையை எண்ணி மிகவும் வருந்துகின்றனர். மறுநாள் காலை மிகுந்த ஆரவாரத்துடனும்; பூதேவர்கள் ஒழிக என்ற முழக்கத்துடனும், சில நாட்டு விழா நடத்துகின்றனர் மாலூர்வாசிகள். பூதேவர்களின் சூழ்ச்சியால் வெளியேற்றப்பட்ட "ஆண்டவர்கள்" மாலூர் வாசிகளில் அறிவுத்திறனுடைய ஒன்பதின்மரின் துணிகரச் செயலால் தங்கள் "இல்லங்"களில் மீண்டும் குடியேற்றப்படுகின்றனர். "சில நாட்டு விழா" மிகவும் சிறப்பாக நடைபெறும் அதே நேரத்தில், "தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் தகுதியற்ற இந்த "சாமி"களா நம்மைக் காப்பாற்றப் போகின்றன?" என்று ஒரு சிலர் தமக்குத்தாமே முணுமுணுக்கலாயினர்—ஆனால் அந்த முணுமுணுப்பின் பொருள் என்ன என்பது அப்போது மாலூர் வாசிகளுக்கு விளக்கவில்லை! விளங்கும் காலம் வரும்!

["பூதேவர் தோல்வி" முற்றிற்று]

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடியது என்பதை நன்கறிந்திருக்கிறீர், என்றாலும் தேசிய கூடாரத்தை விட்டு தைரியமாக வெளியே வந்து, அஞ்சாநெஞ்சுடன் பார்ப்பனீய எதிர்ப்புப் போராட்டத்தைத் துவக்கினாரே தங்கள் முன்னாள் குரு—ஆம்—எங்கள் மாபெரும் தலைவர் பெரியார், அந்தத் துணிச்சலிலே, தைரியத்திலே, வீரத்திலே, அஞ்சாமையிலே ஆயிரத்தில் ஒரு பங்கு தங்களிடம் இருந்திருந்தால்கூட, ஆரியநச்சரவம், இதுபோலத் தங்களிடம் "வாலாட்டி"யிருக்க முடியாது, தன் நச்சுப் பல்லை தங்கள் இதயத்தில் பொருத்தி தன் விஷத்தை அங்கு உமிழ்ந்திருக்கவும் முடியாது, தங்கள் இதயத்தை இன்றுபோல, சோர்ந்து சுருண்டு மடங்கிப் போகும்படி செய்திருக்கவும் முடியாது. எங்கள் பெரியாரை அண்டுகிறதா ஆரிய விரியன், கிட்டே வரவாவது துணிகிறதா, நீவிரே பாரும்!

என்ன சொல்லி என்ன பலன்? நீரும் உம்போல்வார் திராவிடர் வேறு பலரும் காங்கிரஸ் கூடாரத்தில் முடங்கிக் கிடக்கும்வரை இத்தலைகய பலிவாங்கும் நிகழ்ச்சிகள் அடிக்கடி நடந்துகொண்டு தான் இருக்கும்—ஆரியப் பூசாரி அடிக்கடி ஓர் ஓமந்தூரார் தப்பினால் மற்றுமோர் ஓமந்தூராரை பலிபீடத்தில் ஏற்றிக் கொண்டுதான் இருப்பான்! ஐயமா உமக்கு இந்த உண்மையில்! குருகுலப் போராட்டத்திலிருந்து இன்றுவரையுள்ள தென்னாட்டுக் காங்கிரஸ் வரலாற்றை ஒருமுறை புரட்டிப்பாரும்—எத்தனை ஓமந்தூரார்களை ஆரியம் பலிவாங்கியிருக்கிறது என்னும் பயங்கர உண்மை தெள்ளிதிற் புலனாகும். தீப்பற்றிக்கொண்டு திகிதிகி என எரிந்துகொண்டிருக்கும் மாளிகையில் இருக்கிறீர்—எனவே உடல் வெந்துவிட்டது. உள்ளிருந்து கொண்டே தீயை அணைத்துவிடலாம் என்று எண்ணினீர், முயன்றும் பார்த்தீர், முயற்சி உம் உடலைக் கருக்கி விட்டது. தீயை அணைக்க வேண்டுமானால் வெளியே வந்து நின்றுகொண்டு பகுத்தறிவு என்னும் நெருப்பணைக்கும் எஞ்சினைக் கொண்டுதான் அணைக்க முடியும் என்று நாங்கள் சொன்னோம். நீர் கேட்கவில்லை—எம்மைக் கேலி செய்தீர்—கைபால் ஆகாதவர்கள் என்று கிண்டல்மொழி வீசினீர்—எங்கள் பெரியாரைப்பற்றியும் அப்படித்தான் கூறினீர்—இன்று, உள்ளிருந்த காரணத்தால் தீ, உம்மை வதைத்துவிட்டது. வேதனைப்படுகிறீர். இனி வேதனைப்பட்டு ஆவதென்ன இருக்கிறது? காலாகாலத்தில் ஆரியத் தீப் பற்றிக்கொண்டு எரிந்துகொண்டிருக்கும் அந்த காங்கிரஸ் மாளிகையை விட்டு வெளியேறியிருந்தால் இந்தக் கதி உமக்கு நேர்ந்திருக்காது. நீரும் வெளியேறவில்லை, வெளியேறிவிட்ட எங்கள் தலைவரையும் கேலி செய்தீர், விளைவு—இதோ நீரேதான் பார்க்கிறீரே! ஆரியத் தீயால் கருத்துப் போன உம் உடல்!!

பிரதமர் பொறுப்பும், பொறுப்பின் காரணமாக ஏற்பட்ட உடல் உள்ளம் இவற்றின் தளர்ச்சியும், ஓய்வின்மையும், இதுவரை உம்மை சிந்திக்கவிடவில்லை. இப்போதுதான் ஓய்வு ஏராளமாகக் கிடைத்திருக்கிறதே, ஓமந்தூர் கிராமத்தில் கழனிகளின் ஓரத்தில் அமைதியான சூழ்நிலையில் நிம்மதியாக வாழும் நிலைமை ஏற்பட்டிருக்கிறதே, இப்போது சிந்தித்துப் பாருங்கள், குருகுலப் போராட்டத்திற்குப் பிறகு பெரியார் சென்ற பாதை சரியா, நீவிர் சென்ற வழி சரியா என்பது பற்றி!

பிரதமர் பதவி பறிபோனதைப் பற்றி உமக்குத் துளியும் வருத்தம் இராது என்பது எனக்குத் தெரியும்—அதை ஒரு சுமையாகத் தானே கருதிவந்தீர் நீர்!—எனவே அதுபற்றி நான் ஏதும் அனுதாபக் குறிப்பைச் சேர்க்கவில்லை இக்கடிதத்தில்!

எங்கேயாவது, எப்போதாவது, "அறநிலைய மசோதா" போன்ற ஏதாவது ஒரு இடத்தில் சமயம் நேர்ந்தால் சந்திப்போம்.

வணக்கம்.

இங்ஙனம்

தங்களால் பலமுறை சிறைக்குள் தள்ளப்பட்ட—ஆனால் தங்கள் தனிப்பட்ட ஒழுக்க சீலத்தை ஒருநாளும் போற்ற மறவாத தங்கள் மாற்றுக்கட்சித் தோழன்,

சூஞூமாஜூ.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)